**நீதித்துறை நடுவர் நீதிமன்றம், தேனி.**
**ஆண்டுப் பட்டிகை வழக்கு எண். 404/2023.**
**வழக்கு சாட்சி – அ.சா. 2.**

| | | | |
|---|---|---|---|
| பெயர் | திரு. நவநீதகிருஷ்ணன். | ஜாதி | |
| தந்தை பெயர் | மல்லையன். | தொழில் | சிறப்பு சார்பு ஆய்வாளர். |
| கிராமம் | கூடலூர். | சமயம் | |
| தாலுக்கா மற்றும் மாவட்டம் | | வயது | 49/2026. |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 29.06.2026.

**(1, 2 எதிரிகள் ஆஜர். எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜர்).**

**<u>அரசுத் தரப்பு முதல் விசாரணை:–</u>**

(1) நான் தற்போது, அல்லிநகரம் காவல் நிலையத்தில் சிறப்பு சார்பு ஆய்வாளராகப் பணிபுரிந்து வருகிறேன். எங்கள் காவல் நிலையத்தில் ஏற்கனவே பணிபுரிந்த சார்பு ஆய்வாளர் திரு. சதீஸ் என்பவரது கையெழுத்து எனக்கு நன்கு பரிச்சயம் என்ற அடிப்படையிலும், வழக்குக் கோப்புக்களின் அடிப்படையிலும் நான் சாட்சியமளிக்கிறேன். கடந்த 25.03.2017 ஆம் தேதி காலை 05.00 மணிக்கு சார்பு ஆய்வாளர் திரு. கண்ணன் என்பவர் நிலையப் பொறுப்பிலிருந்தபோது, தேனி, க.விலக்கு அரசு மருத்துவமனையிலிருந்து கிடைக்கப்பெற்ற தகவலைப் பெற்று, அங்கு சிகிச்சையில் இருந்த ராஜரத்தினம் என்பவரை விசாரித்து, அவர் கொடுத்த புகார் வாக்குமூலத்தின் அடிப்படையில் காவல் நிலையக் குற்ற எண். 116/2017, சட்டப் பிரிவுகள் 341, 294(b), 323, 324, 506(ii) இதச வின் கீழ் வழக்குப் பதிவு செய்துள்ளார். அந்தப் புகார் வாக்குமூலம் **அ.சா.ஆ.3** ஆகும். முதல் தகவல் அறிக்கை **அ.சா.ஆ.4** ஆகக் குறியீடு செய்யப்படுகிறது.

(2) பின்னர், அன்றைய தினமே காலை 09.30 மணிக்கு சம்பவ இடம் சென்று, சாட்சிகள் ராஜ்குமார் மற்றும் சிவந்தன் ஆகியோர்கள் முன்னிலையில் சம்பவ இடத்தைப் பார்வையிட்டு பார்வை மகசர் மற்றும் மாதிரி வரைபடம்

தயாரித்துள்ளார். பார்வை மகசர் **அ.சா.ஆ.5** மற்றும் மாதிரி வரைபடம் **அ.சா.ஆ.6** ஆகக் குறியீடு செய்யப்படுகிறது. பின்னர் சம்பவயிட சாட்சிகள் 1 முதல் 3 வரையில் உள்ள சாட்சிகளையும், மகசர் சாட்சிகளையும் தனித்தனியாக விசாரித்து வாக்குமூலங்கள் பதிவு செய்துள்ளார்.

(3) பின்னர் உண்மையெனத் தெரிந்து எதிரிகளைத் தேடிவந்த நிலையில், எதிரிகள் பாண்டிக்குமார் மற்றும் மகேஸ்வரி ஆகியோர்களைத் தேடி வந்த நிலையில், 1–வது எதிரி பாண்டிக்குமாரை அன்றைய தினமே மதியம் 02.30 மணிக்கு க.விலக்கு அரசு மருத்துவமனை அருகே வைத்து காரணம்கூறி, கைது செய்து தக்க வழிக்காவல் மூலம் நீதிமன்றக் காவலுக்கு அனுப்பிவைத்தேன். 2–வது எதிரி மகேஸ்வரி நீதிமன்றத்தில் முன்பிணை பெற்றுவிட்டபடியால் அவரைக் கைது செய்யவில்லை. விசாரணையின் அடிப்படையில் முதல் தகவல் அறிக்கையில் 3–வது எதிரியாக காட்டப்பட்டுள்ளவரை நீக்கம் செய்து, எதிரி நீக்கல் அறிக்கை தாக்கல் செய்துள்ளார். அந்த எதிரி நீக்கல் அறிக்கை **அ.சா.ஆ.7** ஆகக் குறியீடு செய்யப்படுகிறது. இவ்வழக்கில் காயம்பட்டவருக்கு சிகிச்சை வழங்கிய மருத்துவர் திரு. சூரியக்குமார் என்பவரை விசாரித்து, காயச் சான்று பெற்று, வாக்குமூலம் பதிவு செய்துள்ளார். அந்தக் காயச் சான்று **அ.சா.ஆ.8** ஆகக் குறியீடு செய்யப்படுகிறது. பின்னர், அவரது புலன் விசாரணையை முடித்து எதிரிகளுக்கு எதிராக சட்டப் பிரிவுகள் 341, 294(b), 323, 324, 506(ii) –இன் கீழ் குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளார்.

<u>**எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை:–**</u>

அ.சா.1–டம் எழுதாத வெள்ளைப் பேப்பரில் கையொப்பம் மட்டும் பெற்றுக்கொண்டு, வழக்கு சம்பந்தப்பட்ட ஆவணங்கள் பின்னிட்டு காவல் நிலையத்தில் வைத்துத் தயாரிக்கப்பட்டது என்றாலும், சொன்ன நேரத்தில், வழக்கின் எந்தவொரு சாட்சிகளை சரிவர விசாரணை செய்யவில்லை என்றாலும், 1–வது எதிரி சொன்ன நேரம் மற்றும் இடத்தில் வைத்து கைது செய்யப்படவில்லை என்றாலும், ஆஜர் எதிரிகளுக்கு எதிராக தவறாக குற்ற இறுதி

அறிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றாலும் சரியல்ல. இந்த வழக்கிற்கும், எதிரிகளுக்கும் எந்தவித சம்பந்தமும் இல்லை என்று சொன்னாலும் சரியல்ல.

**திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச் சொல்ல என்னால் தட்டச்சருக்குச் சொல்லப்பட்டு, கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்குப் படித்துக் காட்டப்பட்டு, அவரால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டு, என் முன்னால் சாட்சியால் கையொப்பமிடப்பட்டது.**

BHARATHA DEVI

Digitally signed by BHARATHA DEVI
Date: 2026.06.29 07:14:00 +0530

**நீதித்துறை நடுவர்,**
**தேனி.**